©
GOVERNMENT OF TAMIL NADU
2013

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 8.80 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

**சிறப்பு வெளியீடு** ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 310A] சென்னை, திங்கட்கிழமை, அக்டோபர் 28, 2013
ஐப்பசி 11, விஜய, திருவள்ளுவர் ஆண்டு-2044

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

**பொருளடக்கம்**

**சட்டமுன்வடிவுகள் :**

எண் 23/2013— தஞ்சாவூர் மாநகராட்சிச் சட்டம் .. .. 2–9

எண் 24/2013— திண்டுக்கல் மாநகராட்சிச் சட்டம் .. .. 11–18

எண் 25/2013— தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டம் .. .. .. 19–21

2013–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 28–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க–காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2013

## தஞ்சாவூர் மாநகரத்திற்கென மாநகராட்சி ஒன்றினை அமைப்பதற்கு வகைசெய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்தியக் குடியரசின் அறுபத்து நான்காம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு அளாவுகை மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டம், 2013–ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாநகராட்சிச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, தஞ்சாவூர் நகரம் முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாக குறித்துரைக்கக் கூடிய அத்தகைய நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

**2.** (1) இந்தச் சட்டத்தில் தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி.—

*(a)* '' தஞ்சாவூர் மாநகரம்'' அல்லது ''மாநகரம்'' என்றால் தஞ்சாவூர் நகராட்சியில் அடங்கியுள்ள உள்ளாட்சிப் பகுதி எனப் பொருள்படும்; மற்றும் இந்தச் சட்டம் தொடங்கிய தேதிக்கு பின்னர் அம் மாநகரத்துடன் சேர்க்கப்படுகிற உள்ளாட்சிப் பரப்பிடம் எதனையும் உள்ளடக்கும்; ஆனால் இந்தச் சட்டத்தின் அத்தகைய தொடக்கத் தேதிக்குப் பின்னர் அம் மாநகரத்திலிருந்து விட்டுவிடப்பட்ட பகுதி எதனையும் உள்ளடக்காது.

*(b)* ''மாநகராட்சி'' என்றால் 3–ஆம் பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட தஞ்சாவூர் மாநகராட்சி எனப்பொருள்படும்.

*(c)* ''மன்றம்'' என்றால் தஞ்சாவூர் மாநகராட்சி மன்றம் எனப்பொருள்படும்.

*(d)* ''இந்தச் சட்டம் தொடங்கிய தேதி'' என்றால் 1–ஆம் பிரிவின் (3)–ஆம் உட்பிரிவின்படி குறித்துரைக்கப்பட்ட தேதி எனப்பொருள்படும்.

*(e)* ''அரசு'' என்றால் மாநில அரசு எனப்பொருள்படும்.

*(f)* ''நகராட்சிமன்றம்'' என்றால் தஞ்சாவூர் நகராட்சி மன்றம் எனப்பொருள்படும்.

*(g)* ''நகராட்சி'' என்றால் தஞ்சாவூர் நகராட்சி எனப்பொருள்படும்.

*(h)* ''தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் தாழ்த்தப்பட்ட பழங்குடியினர்'' என்றால் அரசமைப்புச் சட்டத்தின் 366–ஆம் உறுப்பின் (24) மற்றும் (25)–ஆம் கூறுகளில் அவற்றுக்கு முறையே குறித்தளிக்கப்பட்டுள்ள பொருள்களையே கொண்டிருத்தல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள பொருள் வரையறை செய்யப்படாத ஆனால், (இதன் பின்பு இதில் 1981–ஆம் ஆண்டுச் சட்டம் எனச் சுட்டப்படுவதான) 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தில் பொருள்வரையறை செய்யப்பட்டுள்ள சொற்களும் சொற்றொடர்களும் 1981–ஆம் ஆண்டுச் சட்டத்தில் அவற்றுக்கு முறையே அளிக்கப்பட்டுள்ள அதே பொருள்களையே கொண்டிருத்தல் வேண்டும். தமிழ்நாடு சட்டம் 25/1981.

தஞ்சாவூர் மாநகரத் திற்கென மாநகராட்சியை அமைத்தல்.

**3.** (1) இந்தச் சட்டம் தொடங்கிய தேதியன்றும் அது முதற்கொண்டும் செயல்விளைவு கொள்ளும் வகையில் இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, தஞ்சாவூர் நகராட்சியில் உள்ளடங்கியுள்ள உள்ளாட்சிப் பரப்பிடமானது தஞ்சாவூர் மாநகரமாக அமைதல் வேண்டும்; மற்றும் இந்தச் சட்டம் தொடங்கிய அத்தகைய தேதியிலிருந்து மேற்சொன்ன மாநகரத்திற்கென தஞ்சாவூர் மாநகராட்சி என்ற பெயரில் மாநகராட்சியொன்று அமைக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

***முதலாம் வரம்புரை:*** ஆனால் அரசு, அவ்வப்போது மாநகராட்சியுடன் கலந்தாலோசித்த பின்னர் அறிவிக்கையின் வாயிலாக அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப்பட்டுள்ள பரப்பிடங்களை அதில் உள்ளடக்கும் வகையிலோ அல்லது அதிலிருந்து நீக்கிவிடும் வகையிலோ இந்த உட்பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட மாநகரத்தின் எல்லை வரம்புகளை மாற்றியமைக்கலாம்.

***இரண்டாம் வரம்புரை:*** மேலும், இந்த உட்பிரிவின்படியான அறிவிக்கையொன்றைப் பிறப்பிப்பதற்கான அதிகாரமானது முந்தைய வெளியீட்டிற்கு உட்பட்டு இருக்க வேண்டும்.

(2) இம்மாநகராட்சியானது, மேற்சொன்ன பெயருடன் தொடர்ந்திருக்கும் நிலைப்பாட்டினையும் மற்றும் பொதுவான இலச்சினையையும் பெற்றிருக்கக் கூடியதாகவும், சொத்துக்களைக் கையகப்படுத்துவதற்கு, வைத்திருப்பதற்கு மற்றும் அதனை தீர்வு செய்வதற்கு மற்றும் ஒப்பந்தங்களில் ஈடுபடுவதற்கான அதிகாரத்தைக் கொண்டிருக்கும் ஒரு கூட்டுருமமாக இருத்தல் வேண்டும்; மற்றும் அதனுடைய கூட்டுருமத்தின் பெயரில் வழக்கிடலாம் மற்றும் வழக்கிடப்படலாம்.

(3) இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு உடனடி முன்னதாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த தஞ்சாவூர் நகராட்சியானது, இந்தச் சட்டம் தொடங்கப்பட்ட அத்தகைய தேதியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**4.** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை நிறைவேற்றுவதற்குப் பின்வரும் நகராட்சிய அதிகார அமைப்புகள் பொறுப்புடையனவாக இருத்தல் வேண்டும்.— நகராட்சிய அதிகார அமைப்புகள்.

(1) ஒரு மேயர்;

(2) ஒரு மன்றம்;

(3) ஒரு நிலைக்குழு;

(4) ஒரு சிற்றொகுதிகள் குழு; மற்றும்

(5) ஓர் ஆணையர்.

**5.** (1). (2)—ஆம் உட்பிரிவில் பிறவாறாக வகைசெய்யப்பட்டுள்ளவாறு தவிர, அரசினால் அவ்வப்போது அறிவிக்கையின் மூலமாக நிர்ணயிக்கப்படலாகும், இந்தச் சட்டத்தில் தொகுக்கப்பட்டுள்ள முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அத்தகைய எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும். எனவே எவ்வாறிருப்பினும் மன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையானது எந்த நேரத்திலும் எழுபத்து இரண்டிற்கு மேற்படாமல் இருக்க வேண்டும். மன்றத்தை அமைத்து உருவாக்குதல்.

(2) மன்றத்தில் பின்வரும் நபர்களும் சார்பாற்றம் செய்ய வேண்டும், அதாவது:—

*(a)* மாநகராட்சியின் பரப்பிடத்தை முழுமையாக அல்லது பகுதியாகக் கொண்டிருக்கிற தொகுதிகளுக்காகச் சார்பாற்றம் செய்கின்ற மக்களவை உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சியின் பரப்பிடத்திற்குள் வாக்காளர்களாகப் பதிவு செய்துள்ள மாநிலங்களவை உறுப்பினர்கள்;

*(b)* மாநகராட்சியின் பரப்பிடத்தை முழுமையாக அல்லது பகுதியாகக் கொண்டிருக்கிற தொகுதிகளுக்காகச் சார்பாற்றம் செய்கின்ற தமிழ்நாடு சட்டமன்றப்பேரவையின் அனைத்து உறுப்பினர்கள்.

(3) (2)—ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்டுள்ள நபர்கள் மன்றத்தின் நடவடிக்கைகளில் பங்கெடுத்துக் கொள்வதற்கு உரிமை பெற்றிருப்பர். ஆனால் மன்றக் கூட்டங்களில் வாக்களிப்பதற்கு உரிமை பெற்றிருக்க மாட்டார்கள்.

(4) மன்றத்தில், தாழ்த்தப்பட்ட வகுப்பினை, தாழ்த்தப்பட்ட பழங்குடியினைச் சார்ந்த நபர்களுக்கு பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும். மற்றும் அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும் பதவியிடங்களின் எண்ணிக்கையானது அம்மாநகரத்திலுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பு அல்லது அம்மாநகரத்திலுள்ள தாழ்த்தப்பட்ட பழங்குடியின மக்கள் தொகையானது அம்மாநகரத்தின் மொத்த மக்கள் தொகைக்கு எந்த வீதத்தில் அமைந்திருக்கின்றதோ அதே வீதத்தில் கிட்டத்தட்ட இருக்கலாகிறவாறு மன்றத்தில் நேரடித் தேர்தலின் மூலம் நிரப்பப்பட வேண்டிய மொத்த பதவியிடங்களின் எண்ணிக்கைக்கேற்ப அமைந்திருக்க வேண்டும்.

(5) தாழ்த்தப்பட்ட வகுப்பினை, தாழ்த்தப்பட்ட பழங்குடியினைச் சார்ந்த நபர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் பதவியிடங்களிலிருந்து தாழ்த்தப்பட்ட வகுப்பினை, தாழ்த்தப்பட்ட பழங்குடியினைச் சார்ந்த பெண்களுக்காக பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும். அது தாழ்த்தப்பட்ட வகுப்பினை, தாழ்த்தப்பட்ட பழங்குடியினைச் சார்ந்த நபர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் பதவியிடங்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கிற்குக் குறைவாக இருத்தல் கூடாது.

(6) மன்றத்தில் பெண்களுக்காக பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் இடங்களின் எண்ணிக்கையானது, மன்றத்திலுள்ள பதவியிடங்களின் மொத்த எண்ணிக்கையில், தாழ்த்தப்பட்ட வகுப்பு, தாழ்த்தப்பட்ட பழங்குடியினப் பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் பதவியிடங்களின் எண்ணிக்கை உள்ளடங்கலாக, மூன்றில் ஒரு பங்கிற்குக் குறைவாக இருத்தல் கூடாது.

(7) (4)–ஆம் மற்றும் (5)–ஆம் உட்பிரிவுகளின்படி ஒதுக்கீடுசெய்யப்படும் பதவியிடங்களானவை அரசமைப்புச் சட்டத்தின் 334–ஆம் உறுப்பில் குறித்துரைக்கப்பட்ட கால அளவு முடிவடைவதன் பேரில் செல்திறம் அற்றுப்போதல் வேண்டும்.

மாநகராட்சியின் கால அளவு.

**6.** (1) மாநகராட்சி குறித்த காலத்திற்கு முன்னரே கலைக்கப்பட்டாலன்றி வழக்கமான ஒவ்வொரு தேர்தலுக்குப் பின்பும் அதனுடைய முதல் கூட்டத்திற்கென குறிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டு கால அளவு வரையில் தொடர்ந்திருக்க வேண்டும்; ஆனால் அதற்கு மேலாக தொடர்ந்திருத்தலாகாது; மற்றும் மேற்சொன்ன ஐந்தாண்டுக் காலம் என்பது மாநகராட்சியைக் கலைக்கக் கூடியதாய் இருக்கும்.

(2) மாநகராட்சியை அமைத்துருவாக்குவதற்கான தேர்தல் ஒன்று,–

*(a)* (1)–ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள அதனுடைய கால அளவு முடிவடைவதற்கு முன்பு, அல்லது

*(b)* அது கலைக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாத கால அளவு முடிவதற்கு முன்பு நடத்தி முடிக்கப்படுதல் வேண்டும்:

***வரம்புரை:*** கலைக்கப்பட்ட மாநகராட்சி தொடர்ந்திருந்திருக்ககூடிய எஞ்சிய கால அளவானது ஆறு மாத காலத்திற்குக் குறைவாக இருக்குமிடத்து, அத்தகைய காலத்திற்காக மாநகராட்சியை அமைத்துருவாக்குவதற்காக இந்த உட்பிரிவின்படி தேர்தல் எதனையும் நடத்துவது தேவையானதாக இருத்தலாகாது.

1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பொருந்தாது எனல்.

**7.** (1). (2)–ஆம் மற்றும் (3)–ஆம் உட்பிரிவுகளின் வகை முறைகளுக்கு உட்பட்டு (இதன் பின்பு மாவட்ட நகராட்சிகள் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டமானது இந்தச் சட்டம் தொடங்கிய தேதியிலிருந்தும் அது முதற்கொண்டும் தஞ்சாவூர் மாநகரத்திற்குள் அடங்கியிருக்கும் உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குப் பொருந்துவது அற்றுப்போக வேண்டும். தமிழ்நாடு சட்டம் V/1920.

(2) அவ்வாறு அற்றுப்போதலானது,–

*(a)* தஞ்சாவூர் மாநகரத்திற்குள் அடங்கியுள்ள உள்ளாட்சிப்பரப்பிடம் எதனையும் பொறுத்த அளவில் மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் முந்தைய செயற்பாட்டினை;

*(b)* மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கு எதிராகப்புரியப்பட்ட குற்றச்செயல் எதனையும் பொறுத்து உள்ளான தண்டம், பறிமுதல் அல்லது தண்டனை எதனையும்; அல்லது

*(c)* அத்தகைய தண்டம், பறிமுதல் அல்லது தண்டனை தொடர்பான புலனாய்வு, சட்ட நடவடிக்கைகள் அல்லது தீர் வழி எதனையும் பாதித்தலாகாது; மற்றும் இந்தச் சட்டம் நிறைவேற்றப்படாதிருந்தாற் போன்று அத்தகைய தண்டம், பறிமுதல் அல்லது தண்டனை எதுவும் விதிக்கப்படலாம்.

(3) (1)–ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்த போதிலும், மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட மற்றும் இந்தச் சட்டம் தொடங்கிய தேதியன்று நடைமுறையிலுள்ள அனைத்து பணிஅமர்த்தங்கள், அறிவிக்கைகள், அறிவிப்புகள், விதிகள், துணைவிதிகள், ஒழுங்குமுறைவிதிகள், ஆணைகள், பணிப்பாணைகள், உரிமங்கள், அனுமதிகள், திட்டங்கள், படிவங்கள், அதிகாரங்கள் ஆகியன எந்த அளவிற்கு

இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாமல் இருக்கின்றனவோ அந்த அளவுக்கு இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட வேண்டிய, பிறப்பிக்கப்பட வேண்டிய அல்லது வழங்கப்பட வேண்டிய பணி அமர்த்தங்களால், அறிவிக்கைகளால், அறிவிப்புகளால், விதிகளால், துணை விதிகளால், ஒழுங்குமுறை விதிகளால், ஆணைகளால், பணிப்பாணைகளால், உரிமங்களால், அனுமதிகளால், திட்டங்களால், படிவங்களால் மற்றும் அதிகாரங்களால் அவை பதிலாக அமைக்கப்படும் வரை, தஞ்சாவூர் மாநகரத்திற்குள் அடங்கியுள்ள உள்ளாட்சிப் பரப்பிடத்தில் நடைமுறையில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

1981–ஆம் ஆண்டு சட்டத்தின் வகைமுறைகள் மாநகராட்சிக்குப் பொருந்துதல்.

**8.** (1) மற்றபடி இதில் வெளிப்படையாக வகை செய்யப்பட்டுள்ளவாறு தவிர, வரி அல்லது கட்டணம் விதிப்பது மற்றும் வசூலிப்பது தொடர்பான வகைமுறைகள் உள்ளடங்கலான 1981–ஆம் ஆண்டுச் சட்டத்தின் அனைத்து வகைமுறைகளும் இதன்மூலம் மாநகராட்சிக்கு நீட்டிக்கப்பட்டு தேவையான மாறுதலுடன் பொருந்துதல் வேண்டும்; மற்றும் 1981–ஆம் ஆண்டுச் சட்டத்தின் பகுதியாக இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் அமைக்கப்பட்டிருந்தாற்போன்று 1981–ஆம் ஆண்டுச் சட்டமானது மாநகராட்சியைப் பொறுத்த அளவில் படிக்கப்பட்டுப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) மாநகராட்சிக்கு, 1981–ஆம் ஆண்டுச் சட்டத்தின் வகைமுறைகளைப் பொருந்தச் செய்வதை எளிதாக்கும் நோக்கத்திற்காக அரசு, அறிவிக்கையின் வாயிலாக, தேவைப்படக்கூடிய அல்லது உகந்ததாக இருக்கக்கூடிய வகைமுறைகள் எவற்றையும் நீக்கறவு செய்தல், திருத்துதல் அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் மூலமாக 1981–ஆம் ஆண்டுச் சட்டம் மற்றும் அதன்படிச் செய்யப்பட்ட விதிகள், துணைவிதிகள் ஆகியவற்றுக்கு ஏற்பமைவுகளை அல்லது மாற்றமைவுகளைச் செய்யலாம், மற்றும் அதன்பின்பு, 1981–ஆம் ஆண்டுச் சட்டமும் அதன்படிச் செய்யப்பட்ட விதிகளும் அவ்வாறு செய்யப்பட்ட ஏற்பமைவுகளுக்கும், மாற்றமைவுகளுக்கும் உட்பட்டு மாநகராட்சிக்குப் பொருந்த வேண்டும்.

(3) 1981–ஆம் ஆண்டுச் சட்டத்தின் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளின் அல்லது துணைவிதிகளின் ஏற்பமைவிற்காக (2)–ஆம் உட்பிரிவின் படி வகைமுறை எதுவும் செய்யப்படாமல் இருந்த போதிலும் அல்லது செய்யப்பட்டிருக்கிற வகைமுறை போதுமானதாக இல்லாத போதிலும், இந்த வகைமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு கோரப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது அதிகார அமைப்பு எதுவும், மாநகராட்சிக்கு அவற்றைப் பொருந்தச் செய்வதை எளிமையாக்கும் நோக்கத்திற்காக, இந்த வகைமுறைகளை, நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது அதிகார அமைப்பின் முன்பு உள்ள பொருட்பாடு தொடர்பாக தேவைப்படலாகும் அல்லது முறையாகக் கொண்டிருக்கும் அதன் பொருள் பாதிக்காத வகையில் அத்தகைய முறையில் பொருள் கொள்ளலாம்.

(4) தஞ்சாவூர் மாநகரத்திற்கு நீட்டிக்கப்பட்டவாறாக பொருந்தத்தக்கவாறாக செய்யப்படும் 1981–ஆம் ஆண்டுச் சட்டத்தில்,–

*(a)* கோயம்புத்தூர் மாநகருக்கு, கோயம்புத்தூர் நகராட்சிக்குமான சுட்டுகை எதுவும், இந்தச் சட்டத்தின் காரணமாக முறையே தஞ்சாவூர் மாநகருக்கு, தஞ்சாவூர் நகராட்சிக்குமான சுட்டுகையாகப் பொருள் கொள்ளப்பட வேண்டும்; மற்றும்

*(b)* கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு, கோயம்புத்தூரின் மாநகராட்சிக்கு மற்றும் கோயம்புத்தூர் நகராட்சிய மாநகராட்சிக்குரிய சுட்டுகை எதுவும், இந்தச் சட்டத்தின் காரணமாக முறையே தஞ்சாவூர் மாநகராட்சிக்கு, தஞ்சாவூரின் மாநகராட்சிக்கு மற்றும் தஞ்சாவூர் நகராட்சிய மாநகராட்சிக்குரிய சுட்டுகையாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

மாறுதல்கால வகைமுறைகள்.

**9.** (1) அனைத்துச் சொத்துக்களும், நகராட்சி மன்றத்தால் அல்லது மன்றத்திற்குப் பயன்படுத்தப்பட்ட, அனுபவிக்கப்பட்ட அல்லது உடைமையில் வைத்துவரப்பட்ட அனைத்து உரிமைகளும் அது எந்த வகையினதாக இருந்தாலும் மற்றும் நகராட்சி மன்றத்திற்குச் சொந்தமான அல்லது அதனிடம் உற்றமைந்துள்ள அல்லது பொறுப்பாட்சி என்ற வகையில் அதனால் அல்லது அதற்காக வைத்துவரப்பட்ட அனைத்து நலன்கள் அது எந்த வகையினதாக இருந்தாலும், மேற்சொன்ன நகராட்சி மன்றத்தினால் எந்த வகையிலும் பயன்படுத்தப்பட்ட, அனுபவிக்கப்பட்ட அல்லது உடைமையில் வைத்துவரப்பட்ட அனைத்து உரிமைகளுடன் மேற்சொன்ன நகராட்சி மன்றத்திற்கு எதிராகச் சட்ட முறையில் இருந்து வரும் அனைத்துக் கடப்பாடுகளும் இந்தச் சட்டம் தொடங்கிய தேதியன்றும் அது முதற்கொண்டும், இது குறித்து பொது அல்லது தனி ஆணையின் மூலமாக அரசானது வழங்கக்கூடிய அத்தகைய பணிப்பாணைகளுக்குட்பட்டு மாநகராட்சியிடம் உற்றமைந்திருத்தல் வேண்டும்.

(2) அத்தகைய தொடக்கத் தேதியன்று உள்ளவாறான அனைத்து வரிபாக்கிகள் அல்லது வரி ஒன்றிற்காக ஒருங்கமைவின் மூலமான பிற செலுத்தங்கள் அல்லது செலவுகளுக்கான பாக்கி அல்லது இழப்பீடு அல்லது பிறவாறு நகராட்சி மன்றத்திற்குக் கொடுபட வேண்டிய தொகையை அத்தகைய மாநகராட்சிக்குச் சேர்ந்து வரவேண்டிய தொகையாகக் கருதி மேற்சொன்ன நிலுவைகளோ அல்லது செலுத்தங்களோ இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி கொடுபட வேண்டிய தொகைகளாகியிருப்பது போன்று வசூலிக்கப்படலாம்.

(3) இந்தச் சட்டம் தொடங்கிய தேதிக்கு உடனடி முன்பாக மேற்சொன்ன நகராட்சி மன்றத்தால் விதிக்கப்பட்டு வந்த அனைத்து வரிகளும், கட்டணங்களும், தீர்வைகளும், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி மாநகராட்சியால் விதிக்கப்பட்டு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய வரிகள், கட்டணங்கள் மற்றும் தீர்வைகள் இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட எதனாலும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதனாலும் மாற்றியமைக்கப்படுவது, நீக்கப்படுவது அல்லது கலைத்து கைக்கொள்ளப்படுவது வரையிலும் அதற்கிணங்கிய வகையில் நடைமுறையில் தொடர்ந்து இருக்க வேண்டும்.

(4) மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி நகராட்சி மன்றத்தால் அல்லது நகராட்சி மன்றத்திற்கு எதிராக அல்லது அதிகார அமைப்பால் அல்லது அதிகார அமைப்பிற்கு எதிராக அல்லது நபரெவராலும் அல்லது நபரெவருக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தும், மேற்சொன்ன நடவடிக்கைகள் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி தொடங்கியிருந்தாற் போன்று மாநகராட்சியால், அதிகார அமைப்பால் அல்லது நபரால் அல்லது அதற்கு அல்லது அவருக்கு எதிராகத் தொடரலாம்.

(5) அத்தகைய தொடக்கத் தேதிக்கு முன்பு அதிகார அமைப்பு எதனாலும் மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டம் நடைமுறையில் இருந்திருந்தாற்போன்று இந்தச் சட்டத்தின்படி அத்தகைய நடவடிக்கையை எடுப்பதற்குரிய அதிகார அமைப்பால் எடுக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(6) இந்தச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்தபோதிலும் இந்தச் சட்டத்தின் தொடக்கத்தேதிக்கு உடனடி முன்பாக நகராட்சியில் பணியில் இருந்த அலுவலர் அல்லது பணியாளர் ஒவ்வொருவரும் அத்தகைய தொடக்கத்தேதியன்றும் அது முதற்கொண்டும் மாநகராட்சியின் அலுவலரொருவராக அல்லது பணியாளரொருவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

***வரம்புரை:*** ஆனால் *(a)* மாநகராட்சியின் பணியில் அவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் விளைவாக அத்தகைய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பொருந்தத்தக்க வரையுரைகளும், வரைக்கட்டுகளும் அத்தகைய தொடக்கத் தேதிக்கு உடனடி முன்பாக அத்தகைய பணியாளர்களுக்கு அடிப்படைச் சம்பளம் மற்றும் படிகள், விடுப்பு, ஓய்வூதியம், பணிக்கொடை, வருங்கால வைப்பு நிதி, ஓய்வுபெறும் வயது வரம்பு ஆகியவற்றைப் பொறுத்தவரையில் பொருந்தக்கூடிய அத்தகைய வரையுரைகளுக்கும், வரைக்கட்டுகளுக்கும் குறைவுபடாது இருத்தல் வேண்டும்; மற்றும்

*(b)* அத்தகைய தொடக்கத் தேதி வரையிலும் நகராட்சியின் கீழ் அத்தகைய அலுவலர் அல்லது பிற பணியாளர் எவராலும் செய்யப்பட்ட பணியானது, மாநகராட்சியின் கீழ் செய்யப்பட்ட பணியாகக் கொள்ளப்படுதல் வேண்டும், மற்றும் அவர் ஊதிய உயர்வுகள், விடுப்பு, ஓய்வூதியம், வருங்கால வைப்பு நிதி, பணிக்கொடை ஆகியவற்றின் நோக்கத்திற்காக அந்தப் பணியைக் கணக்கிலெடுத்துக்கொள்ளும் உரிமைத்தகுதி பெற்றிருத்தல் வேண்டும்:

***இரண்டாம் வரம்புரை:*** ஆனால், நகராட்சியில் பணிபுரிந்து கொண்டிருக்கும் அலுவலர் அல்லது பிற பணியாளர் எவரும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள்ளும் அத்தகைய முறையிலும் மாநகராட்சிப் பணியில் எடுத்துக்கொள்ளும்படியாகவோ அல்லது மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 73–A எனும் பிரிவில் சுட்டப்பட்ட பணிக்கு மாறுதல் செய்யும் படியாகவோ அல்லது வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய ஆட்குறைப்புப் பலன்களின்பேரில் நகராட்சியின் பணியிலிருந்து நீக்கும் படியாகவோ தமது விருப்பத்தைத் தெரிவிக்க விருப்பத் தெரிவு ஒன்று அளிக்கப்படுதல் வேண்டும்.

(7) மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி தஞ்சாவூர் நகராட்சியில் சிற்றொகுதிகளாகப் பிரிக்கப்பட்ட மற்றும் இந்தச் சட்டத்தின் தொடக்கத்தேதியன்று நடைமுறையில் உள்ள சிற்றொகுதி எதுவும் அது மாற்றியமைக்கப்படாதவரையிலும் மாநகராட்சியின் கோட்டமாகவே கொள்ளப்படுதல் வேண்டும்.

(8) மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி தஞ்சாவூர் நகராட்சிக்காகத் தயாரிக்கப்பட்டு இந்தச் சட்டம் தொடங்கிய தேதியன்று நடைமுறையில் இருக்கும் வாக்காளர் பட்டியலானது, புதிய வாக்களார் பட்டியல் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படும் வரையிலும், மாநகராட்சிக்குரிய வாக்காளர் பட்டியலாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் நகராட்சியின் ஒவ்வொரு சிற்றொகுதி தொடர்பான மேற்சொன்ன வாக்காளர் பட்டியலின் பகுதியானது, மாநகராட்சியின் நேரிணையான கோட்டத்திற்கான வாக்காளர் பட்டியலின் பட்டியலாகக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(9) இந்தச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்த போதிலும் இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு உடனடி முன்பாக அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டு பதவி வகிக்கிற தஞ்சாவூர் நகராட்சியின் தலைமையாளர், துணைத் தலைமையாளர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் இந்தச் சட்டத்தின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட தஞ்சாவூர் மாநகராட்சியின் மேயராக, துணை மேயராக மற்றும் மன்ற உறுப்பினர்களாகக் கொள்ளப்படுதல்வேண்டும்; மற்றும் அத்தகைய மேயர், துணை மேயர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் இது குறித்து அரசினால் அறிவிக்கையின் வாயிலாக நிர்ணயிக்கக்கூடிய அத்தகைய தேதிவரையிலும் பதவியைத் தொடர்ந்து வகித்தல் வேண்டும். அல்லது அத்தகைய தேதி எதுவும் நிர்ணயிக்கப்படாமலிருக்கும் நேர்வில், மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி அவர்களுடைய பதவிக்காலம் முடிவடையும் தேதி வரையிலும் பதவி வகித்தல் வேண்டும். மற்றும் அத்தகைய மேயர், துணைமேயர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் இந்தச் சட்டத்தினால் அல்லது இந்தச் சட்டத்தின்படி மேயருக்கு, துணைமேயருக்கு மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் செலுத்துதல் வேண்டும், மற்றும் அனைத்துக் கடமைகளையும் ஆற்றுதல் வேண்டும்.

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

**10.** (1) அரசானது, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) *(a)* இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படுதல் வேண்டும். மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளிலேயே நடைமுறைக்கு வர வேண்டும்

*(b)* இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும், அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்று சொல்லப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளிலேயே நடைமுறைக்கு வர வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும் அது அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும், மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் அல்லது அதனையடுத்தக் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்னர் அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதனையும் சட்டமன்றப் பேரவையானது செய்யுமாயின் அல்லது அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதுவும் செய்யப்படுதலோ அல்லது பிறப்பிக்கப்படுதலோ கூடாது என சட்டமன்றப்பேரவை முடிவு செய்யுமாயின், அந்த விதியானது அல்லது அறிவிக்கையானது அல்லது ஆணையானது அதன்பின்னர் அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்திலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும், அல்லது நேர்விற்கேற்ப, நடைமுறைக்கு வராது போதல் வேண்டும்; எனினும் அவ்வாறான மாறுதல் அல்லது அழித்தறவு எதுவும், அந்த விதியின்படி அல்லது அறிவிக்கையின்படி அல்லது ஆணையின்படி முன்னரே செய்யப்பட்ட செயல் ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

**11.** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால் அரசு, *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் ஆணையின் வாயிலாக அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையானதாகவோ அல்லது உகந்ததாகவோ அதற்குத் தோன்றுகிற, இந்தச் சட்டத்திற்கு முரணாக இல்லாத அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்.

***வரம்புரை:*** ஆனால், இந்தச் சட்டம் தொடங்கிய தேதியிலிருந்து இரண்டாண்டுக்கால அளவு முடிவடைந்த பின்னர் அத்தகைய ஆணை எதுவும் செய்யப்படுதலாகாது.

## நோக்க-காரண விளக்கவுரை.

மக்கள் தொகை அதிகரித்தல், ஆண்டு வருமானத்தில் முன்னேற்றம் மற்றும் தஞ்சாவூரின் மக்கள்தொகைப் பெருக்கத்திற்கேற்ப அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதை முன்னிட்டு வகை செய்யப்படவேண்டிய குடிமைப்பணிகளின் அளவீட்டினையும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினையும் மேம்படுத்துவதனைக் கருத்தில் கொண்டு தஞ்சாவூர் நகராட்சி மாநகராட்சியாக நிலை உயர்த்தப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2013–2014–ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டக் கூட்டத்தொடரில் அறிவித்திருக்கிறார்கள்.

**2.** மேற்சொன்ன அறிவிப்புக்குச் செயல் வடிவம் கொடுப்பதற்காக, அரசானது, தேவைப்படும் அத்தகைய மாற்றமைவுகளுடன், 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) வகைமுறைகளைத் தழுவி ஒரு சிறப்புச் சட்டத்தினை இயற்றுவதென முடிவு செய்துள்ளது.

**3.** இச்சட்டமுன்வடிவு, மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**கே.பி. முனுசாமி**
*நகராட்சி நிர்வாகம் , ஊரக வளர்ச்சி,*
*சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்*
*சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.*

## சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.

இச்சட்ட முன்வடிவின் 1 (3), 3, 5, 8, 9, 10, 11 ஆகிய கூறுகள் அவற்றில் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அறிவிக்கைகளை அல்லது ஆணைகளை பிறப்பிப்பதற்கோ அல்லது நேர்விற்கேற்ப விதிகளைச் செய்வதற்கோ அரசுக்கு அதிகாரமளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையே அன்றி தனித்தன்மை வாய்ந்தவை அல்ல.

**கே.பி. முனுசாமி**
*நகராட்சி நிர்வாகம் , ஊரக வளர்ச்சி,*
*சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்*
*சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.*

**அ.மு.பி. ஜமாலுதீன்,**
*செயலாளர்.*

2013—ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 28—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க—காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2013

## திண்டுக்கல் மாநகரத்திற்கென மாநகராட்சி ஒன்றினை அமைப்பதற்கு வகைசெய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு

இந்தியக் குடியரசின் அறுபத்து நான்காம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

**1.** (1) இந்தச் சட்டம், 2013—ஆம் ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சிச் சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

(2) இது, திண்டுக்கல் நகரம் முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாக குறித்துரைக்கக் கூடிய அத்தகைய நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2.** (1) இந்தச் சட்டத்தில் தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி.— பொருள் வரையறைகள்.

*(a)* '' திண்டுக்கல் மாநகரம்'' அல்லது ''மாநகரம்'' என்றால் திண்டுக்கல் நகராட்சியில் அடங்கியுள்ள உள்ளாட்சிப் பகுதி எனப் பொருள்படும்; மற்றும் இந்தச் சட்டம் தொடங்கிய தேதிக்கு பின்னர் அம் மாநகரத்துடன் சேர்க்கப்படுகிற உள்ளாட்சிப் பரப்பிடம் எதனையும் உள்ளடக்கும்; ஆனால் இந்தச் சட்டத்தின் அத்தகைய தொடக்கத் தேதிக்குப் பின்னர் அம் மாநகரத்திலிருந்து விட்டுவிடப்பட்ட பகுதி எதனையும் உள்ளடக்காது.

*(b)* ''மாநகராட்சி'' என்றால் 3—ஆம் பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட திண்டுக்கல் மாநகராட்சி எனப்பொருள்படும்.

*(c)* ''மன்றம்'' என்றால் திண்டுக்கல் மாநகராட்சி மன்றம் எனப்பொருள்படும்.

*(d)* ''இந்தச் சட்டம் தொடங்கிய தேதி'' என்றால் 1—ஆம் பிரிவின் (3)—ஆம் உட்பிரிவின்படி குறித்துரைக்கப்பட்ட தேதி எனப்பொருள்படும்.

*(e)* ''அரசு'' என்றால் மாநில அரசு எனப்பொருள்படும்.

*(f)* ''நகராட்சிமன்றம்'' என்றால் திண்டுக்கல் நகராட்சி மன்றம் எனப்பொருள்படும்.

*(g)* ''நகராட்சி'' என்றால் திண்டுக்கல் நகராட்சி எனப்பொருள்படும்.

*(h)* ''தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் தாழ்த்தப்பட்ட பழங்குடியினர்'' என்றால் அரசமைப்புச் சட்டத்தின் 366—ஆம் உறுப்பின் (24) மற்றும் (25)—ஆம் கூறுகளில் அவற்றுக்கு முறையே குறித்தளிக்கப்பட்டுள்ள பொருள்களையே கொண்டிருத்தல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள பொருள் வரையறை செய்யப்படாத ஆனால், (இதன் பின்பு இதில் 1981—ஆம் ஆண்டுச் சட்டம் எனச் சுட்டப்படுவதான) 1981—ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தில் பொருள்வரையறை செய்யப்பட்டுள்ள சொற்களும் சொற்றொடர்களும் 1981—ஆம் ஆண்டுச் சட்டத்தில் அவற்றுக்கு முறையே அளிக்கப்பட்டுள்ள அதே பொருள்களையே கொண்டிருத்தல் வேண்டும். தமிழ்நாடு சட்டம் 25/1981.

**3.** (1) இந்தச் சட்டம் தொடங்கிய தேதியன்றும் அது முதற்கொண்டும் செயல்விளைவு கொள்ளும் வகையில் இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, திண்டுக்கல் நகராட்சியில் உள்ளடங்கியுள்ள உள்ளாட்சிப் பரப்பிடமானது திண்டுக்கல் மாநகரமாக அமைதல் வேண்டும்; மற்றும் இந்தச் சட்டம் தொடங்கிய அத்தகைய தேதியிலிருந்து மேற்சொன்ன மாநகரத்திற்கென திண்டுக்கல் மாநகராட்சி என்ற பெயரில் மாநகராட்சியொன்று அமைக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படுதல் வேண்டும். திண்டுக்கல் மாநகரத்திற்கென மாநகராட்சியை அமைத்தல்.

***முதலாம் வரம்புரை:*** ஆனால் அரசு, அவ்வப்போது மாநகராட்சியுடன் கலந்தாலோசித்த பின்னர் அறிவிக்கையின் வாயிலாக அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப்பட்டுள்ள பரப்பிடங்களை அதில் உள்ளடக்கும் வகையிலோ அல்லது அதிலிருந்து நீக்கிவிடும் வகையிலோ இந்த உட்பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட மாநகரத்தின் எல்லை வரம்புகளை மாற்றியமைக்கலாம்.

***இரண்டாம் வரம்புரை:*** மேலும், இந்த உட்பிரிவின்படியான அறிவிக்கையொன்றைப் பிறப்பிப்பதற்கான அதிகாரமானது முந்தைய வெளியீட்டிற்கு உட்பட்டு இருக்க வேண்டும்.

(2) இம்மாநகராட்சியானது, மேற்சொன்ன பெயருடன் தொடர்ந்திருக்கும் நிலைப்பாட்டினையும் மற்றும் பொதுவான இலச்சினையையும் பெற்றிருக்கக் கூடியதாகவும், சொத்துக்களைக் கையகப்படுத்துவதற்கு, வைத்திருப்பதற்கு மற்றும் அதனை தீர்வு செய்வதற்கு மற்றும் ஒப்பந்தங்களில் ஈடுபடுவதற்கான அதிகாரத்தைக் கொண்டிருக்கும் ஒரு கூட்டுருமமாக இருத்தல் வேண்டும்; மற்றும் அதனுடைய கூட்டுருமத்தின் பெயரில் வழக்கிடலாம் மற்றும் வழக்கிடப்படலாம்.

(3) இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு உடனடி முன்னதாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த திண்டுக்கல் நகராட்சியானது, இந்தச் சட்டம் தொடங்கப்பட்ட அத்தகைய தேதியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

நகராட்சிய அதிகார அமைப்புகள்.

**4.** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை நிறைவேற்றுவதற்குப் பின்வரும் நகராட்சிய அதிகார அமைப்புகள் பொறுப்புடையனவாக இருத்தல் வேண்டும்.—

(1) ஒரு மேயர்;

(2) ஒரு மன்றம்;

(3) ஒரு நிலைக்குழு;

(4) ஒரு சிற்றொகுதிகள் குழு; மற்றும்

(5) ஓர் ஆணையர்.

மன்றத்தை அமைத்து உருவாக்குதல்.

**5.** (1) (2)—ஆம் உட்பிரிவில் பிறவாறாக வகைசெய்யப்பட்டுள்ளவாறு தவிர, அரசினால் அவ்வப்போது அறிவிக்கையின் மூலமாக நிர்ணயிக்கப்படலாகும், இந்தச் சட்டத்தில் தொகுக்கப்பட்டுள்ள முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அத்தகைய எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும். எனவே எவ்வாறிருப்பினும் மன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையானது எந்த நேரத்திலும் எழுபத்து இரண்டிற்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

(2) மன்றத்தில் பின்வரும் நபர்களும் சார்பாற்றம் செய்ய வேண்டும், அதாவது:—

*(a)* மாநகராட்சியின் பரப்பிடத்தை முழுமையாக அல்லது பகுதியாகக் கொண்டிருக்கிற தொகுதிகளுக்காகச் சார்பாற்றம் செய்கின்ற மக்களவை உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சியின் பரப்பிடத்திற்குள் வாக்காளர்களாகப் பதிவு செய்துள்ள மாநிலங்களவை உறுப்பினர்கள்;

*(b)* மாநகராட்சியின் பரப்பிடத்தை முழுமையாக அல்லது பகுதியாகக் கொண்டிருக்கிற தொகுதிகளுக்காகச் சார்பாற்றம் செய்கின்ற தமிழ்நாடு சட்டமன்றப்பேரவையின் அனைத்து உறுப்பினர்கள்.

(3) (2)—ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்டுள்ள நபர்கள் மன்றத்தின் நடவடிக்கைகளில் பங்கெடுத்துக் கொள்வதற்கு உரிமை பெற்றிருப்பர். ஆனால் மன்றக் கூட்டங்களில் வாக்களிப்பதற்கு உரிமை பெற்றிருக்க மாட்டார்கள்.

(4) மன்றத்தில், தாழ்த்தப்பட்ட வகுப்பினை, தாழ்த்தப்பட்ட பழங்குடியினைச் சார்ந்த நபர்களுக்கு பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும். மற்றும் அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும் பதவியிடங்களின் எண்ணிக்கையானது அம்மாநகரத்திலுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பு அல்லது அம்மாநகரத்திலுள்ள தாழ்த்தப்பட்ட பழங்குடியின மக்கள் தொகையானது அம்மாநகரத்தின் மொத்த மக்கள் தொகைக்கு எந்த வீதத்தில் அமைந்திருக்கின்றதோ அதே வீதத்தில் கிட்டத்தட்ட இருக்கலாகிறவாறு மன்றத்தில் நேரடித் தேர்தலின் மூலம் நிரப்பப்பட வேண்டிய மொத்த பதவியிடங்களின் எண்ணிக்கைக்கேற்ப அமைந்திருக்க வேண்டும்.

(5) தாழ்த்தப்பட்ட வகுப்பினை, தாழ்த்தப்பட்ட பழங்குடியினைச் சார்ந்த நபர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் பதவியிடங்களிலிருந்து தாழ்த்தப்பட்ட வகுப்பினை, தாழ்த்தப்பட்ட பழங்குடியினைச் சார்ந்த பெண்களுக்காக பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும். அது தாழ்த்தப்பட்ட வகுப்பினை, தாழ்த்தப்பட்ட பழங்குடியினைச் சார்ந்த நபர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் பதவியிடங்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கிற்குக் குறைவாக இருத்தல் கூடாது.

(6) மன்றத்தில் பெண்களுக்காக பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் பதவியிடங்களின் எண்ணிக்கையானது, மன்றத்திலுள்ள பதவியிடங்களின் மொத்த எண்ணிக்கையில், தாழ்த்தப்பட்ட வகுப்பு, தாழ்த்தப்பட்ட பழங்குடியினப் பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் பதவியிடங்களின் எண்ணிக்கை உள்ளடங்கலாக, மூன்றில் ஒரு பங்கிற்குக் குறைவாக இருத்தல் கூடாது.

(7) (4)–ஆம் மற்றும் (5)–ஆம் உட்பிரிவுகளின்படி ஒதுக்கீடுசெய்யப்படும் பதவியிடங்களானவை அரசமைப்புச் சட்டத்தின் 334–ஆம் உறுப்பில் குறித்துரைக்கப்பட்ட கால அளவு முடிவடைவதன் பேரில் செல்திறம் அற்றுப்போதல் வேண்டும்.

**6** (1) மாநகராட்சி குறித்த காலத்திற்கு முன்னரே கலைக்கப்பட்டாலன்றி வழக்கமான ஒவ்வொரு தேர்தலுக்குப் பின்பும் அதனுடைய முதல் கூட்டத்திற்கென குறிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டு கால அளவு வரையில் தொடர்ந்திருக்க வேண்டும்; ஆனால் அதற்கு மேலாக தொடர்ந்திருத்தலாகாது; மற்றும் மேற்சொன்ன ஐந்தாண்டுக் காலம் என்பது மாநகராட்சியைக் கலைக்கக் கூடியதாய் இருக்கும். மாநகராட்சியின் கால அளவு.

(2) மாநகராட்சியை அமைத்துருவாக்குவதற்கான தேர்தல் ஒன்று,–

*(a)* (1)–ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள அதனுடைய கால அளவு முடிவடைவதற்கு முன்பு, அல்லது

*(b)* அது கலைக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாத கால அளவு முடிவதற்கு முன்பு நடத்தி முடிக்கப்படுதல் வேண்டும்:

***வரம்புரை:*** கலைக்கப்பட்ட மாநகராட்சி தொடர்ந்திருந்திருக்கக் கூடிய எஞ்சிய கால அளவானது ஆறு மாத காலத்திற்குக் குறைவாக இருக்குமிடத்து, அத்தகைய காலத்திற்காக மாநகராட்சியை அமைத்துருவாக்குவதற்காக இந்த உட்பிரிவின்படி தேர்தல் எதனையும் நடத்துவது தேவையானதாக இருத்தலாகாது.

**7.** (1) (2)–ஆம் மற்றும் (3)–ஆம் உட்பிரிவுகளின் வகை முறைகளுக்கு உட்பட்டு (இதன் பின்பு மாவட்ட நகராட்சிகள் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டமானது இந்தச் சட்டம் தொடங்கிய தேதியிலிருந்தும் அது முதற்கொண்டும் திண்டுக்கல் மாநகரத்திற்குள் அடங்கியிருக்கும் உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குப் பொருந்துவது அற்றுப்போக வேண்டும். 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பொருந்தாது எனல். தமிழ்நாடு சட்டம் V/1920.

(2) அவ்வாறு அற்றுப்போதலானது,–

*(a)* திண்டுக்கல் மாநகரத்திற்குள் அடங்கியுள்ள உள்ளாட்சிப்பரப்பிடம் எதனையும் பொறுத்த அளவில் மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் முந்தைய செயற்பாட்டினை;

*(b)* மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கு எதிராகப்புரியப்பட்ட குற்றச்செயல் எதனையும் பொறுத்து உள்ளான தண்டம், பறிமுதல் அல்லது தண்டனை எதனையும்; அல்லது

*(c)* அத்தகைய தண்டம், பறிமுதல் அல்லது தண்டனை தொடர்பான புலனாய்வு, சட்ட நடவடிக்கைகள் அல்லது தீர் வழி எதனையும் பாதித்தலாகாது; மற்றும் இந்தச் சட்டம் நிறைவேற்றப்படாதிருந்தாற் போன்று அத்தகைய தண்டம், பறிமுதல் அல்லது தண்டனை எதுவும் விதிக்கப்படலாம்,

(3) (1)–ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்த போதிலும், மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட மற்றும் இந்தச் சட்டம் தொடங்கிய தேதியன்று நடைமுறையிலுள்ள அனைத்து பணிஅமர்த்தங்கள், அறிவிக்கைகள், அறிவிப்புகள், விதிகள், துணைவிதிகள், ஒழுங்குமுறைவிதிகள், ஆணைகள், பணிப்பாணைகள், உரிமங்கள், அனுமதிகள், திட்டங்கள், படிவங்கள், அதிகாரங்கள் ஆகியன எந்த அளவிற்கு

இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாமல் இருக்கின்றனவோ அந்த அளவுக்கு இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட வேண்டிய, பிறப்பிக்கப்பட வேண்டிய அல்லது வழங்கப்பட வேண்டிய பணிஅமர்த்தங்களால், அறிவிக்கைகளால், அறிவிப்புகளால், விதிகளால், துணைவிதிகளால், ஒழுங்குமுறைவிதிகளால், ஆணைகளால், பணிப்பாணைகளால், உரிமங்களால், அனுமதிகளால், திட்டங்களால், படிவங்களால் மற்றும் அதிகாரங்களால் அவை பதிலாக அமைக்கப்படும்வரை, திண்டுக்கல் மாநகரத்திற்குள் அடங்கியுள்ள உள்ளாட்சிப் பரப்பிடத்தில் நடைமுறையில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

1981–ஆம் ஆண்டு சட்டத்தின் வகைமுறைகள் மாநகராட்சிக்குப் பொருந்துதல்.

**8.** (1) மற்றபடி இதில் வெளிப்படையாக வகை செய்யப்பட்டுள்ளவாறு தவிர, வரி அல்லது கட்டணம் விதிப்பது மற்றும் வசூலிப்பது தொடர்பான வகைமுறைகள் உள்ளடங்கலான 1981–ஆம் ஆண்டுச் சட்டத்தின் அனைத்து வகைமுறைகளும் இதன்மூலம் மாநகராட்சிக்கு நீட்டிக்கப்பட்டு தேவையான மாறுதலுடன் பொருந்துதல் வேண்டும்; மற்றும் 1981–ஆம் ஆண்டுச் சட்டத்தின் பகுதியாக இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் அமைக்கப்பட்டிருந்தாற்போன்று 1981–ஆம் ஆண்டுச் சட்டமானது மாநகராட்சியைப் பொறுத்த அளவில் படிக்கப்பட்டுப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) மாநகராட்சிக்கு, 1981–ஆம் ஆண்டுச் சட்டத்தின் வகைமுறைகளைப் பொருந்தச்செய்வதை எளிதாக்கும் நோக்கத்திற்காக அரசு, அறிவிக்கையின் வாயிலாக, தேவைப்படக்கூடிய அல்லது உகந்ததாக இருக்கக்கூடிய வகைமுறைகள் எவற்றையும் நீக்கறவு செய்தல், திருத்துதல் அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் மூலமாக 1981–ஆம் ஆண்டுச் சட்டம் மற்றும் அதன்படிச் செய்யப்பட்ட விதிகள், துணைவிதிகள் ஆகியவற்றுக்கு ஏற்பமைவுகளை அல்லது மாற்றமைவுகளைச் செய்யலாம், மற்றும் அதன்பின்பு, 1981–ஆம் ஆண்டுச் சட்டமும் அதன்படிச் செய்யப்பட்ட விதிகளும் அவ்வாறு செய்யப்பட்ட ஏற்பமைவுகளுக்கும், மாற்றமைவுகளுக்கும் உட்பட்டு மாநகராட்சிக்குப் பொருந்த வேண்டும்.

(3) 1981–ஆம் ஆண்டுச் சட்டத்தின் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளின் அல்லது துணைவிதிகளின் ஏற்பமைவிற்காக (2)–ஆம் உட்பிரிவின் படி வகைமுறை எதுவும் செய்யப்படாமல் இருந்த போதிலும் அல்லது செய்யப்பட்டிருக்கிற வகைமுறை போதுமானதாக இல்லாத போதிலும், இந்த வகைமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு கோரப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது அதிகார அமைப்பு எதுவும், மாநகராட்சிக்கு அவற்றைப் பொருந்தச் செய்வதை எளிமையாக்கும் நோக்கத்திற்காக, இந்த வகைமுறைகளை, நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது அதிகார அமைப்பின் முன்பு உள்ள பொருட்பாடு தொடர்பாக தேவைப்படலாகும் அல்லது முறையாகக் கொண்டிருக்கும் அதன் பொருள் பாதிக்காத வகையில் அத்தகைய முறையில் பொருள் கொள்ளலாம்.

(4) திண்டுக்கல் மாநகரத்திற்கு நீட்டிக்கப்பட்டவாறாக பொருந்தத்தக்கவாறாக செய்யப்படும் 1981–ஆம் ஆண்டுச் சட்டத்தில்,–

*(a)* கோயம்புத்தூர் மாநகருக்கு, கோயம்புத்தூர் நகராட்சிக்குமான சுட்டுகை எதுவும், இந்தச் சட்டத்தின் காரணமாக முறையே திண்டுக்கல் மாநகருக்கு, திண்டுக்கல் நகராட்சிக்குமான சுட்டுகையாகப் பொருள் கொள்ளப்பட வேண்டும்; மற்றும்

*(b)* கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு, கோயம்புத்தூரின் மாநகராட்சிக்கு மற்றும் கோயம்புத்தூர் நகராட்சிய மாநகராட்சிக்குரிய சுட்டுகை எதுவும், இந்தச் சட்டத்தின் காரணமாக முறையே திண்டுக்கல் மாநகராட்சிக்கு, திண்டுக்கல்லின் மாநகராட்சிக்கு மற்றும் திண்டுக்கல் நகராட்சிய மாநகராட்சிக்குரிய சுட்டுகையாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

மாறுதல்கால வகைமுறைகள்.

**9.** (1) அனைத்துச் சொத்துக்களும், நகராட்சி மன்றத்தால் அல்லது மன்றத்திற்குப் பயன்படுத்தப்பட்ட, அனுபவிக்கப்பட்ட அல்லது உடைமையில் வைத்துவரப்பட்ட அனைத்து உரிமைகளும் அது எந்த வகையினதாக இருந்தாலும் மற்றும் நகராட்சி மன்றத்திற்குச் சொந்தமான அல்லது அதனிடம் உற்றமைந்துள்ள அல்லது பொறுப்பாட்சி என்ற வகையில் அதனால் அல்லது அதற்காக வைத்துவரப்பட்ட அனைத்து நலன்கள் அது எந்த வகையினதாக இருந்தாலும், மேற்சொன்ன நகராட்சி மன்றத்தினால் எந்த வகையிலும் பயன்படுத்தப்பட்ட, அனுபவிக்கப்பட்ட அல்லது உடைமையில் வைத்துவரப்பட்ட அனைத்து உரிமைகளுடன் மேற்சொன்ன நகராட்சி மன்றத்திற்கு எதிராகச் சட்ட முறையில் இருந்து வரும் அனைத்துக் கடப்பாடுகளும் இந்தச் சட்டம் தொடங்கிய தேதியன்றும் அது முதற்கொண்டும், இது குறித்து பொது அல்லது தனி ஆணையின் மூலமாக அரசானது வழங்கக்கூடிய அத்தகைய பணிப்பாணைகளுக்குட்பட்டு மாநகராட்சியிடம் உற்றமைந்திருத்தல் வேண்டும்.

(2) அத்தகைய தொடக்கத் தேதியன்று உள்ளவாறான அனைத்து வரிபாக்கிகள் அல்லது வரி ஒன்றிற்காக ஒருங்கமைவின் மூலமான பிற செலுத்தங்கள் அல்லது செலவுகளுக்கான பாக்கி அல்லது இழப்பீடு அல்லது பிறவாறு நகராட்சி மன்றத்திற்குக் கொடுபட வேண்டிய தொகையை அத்தகைய மாநகராட்சிக்குச் சேர்ந்து வரவேண்டிய தொகையாகக் கருதி மேற்சொன்ன நிலுவைகளோ அல்லது செலுத்தங்களோ இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி கொடுபட வேண்டிய தொகைகளாகியிருப்பது போன்று வசூலிக்கப்படலாம்.

(3) இந்தச் சட்டம் தொடங்கிய தேதிக்கு உடனடி முன்பாக மேற்சொன்ன நகராட்சி மன்றத்தால் விதிக்கப்பட்டு வந்த அனைத்து வரிகளும், கட்டணங்களும், தீர்வைகளும், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி மாநகராட்சியால் விதிக்கப்பட்டு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய வரிகள், கட்டணங்கள் மற்றும் தீர்வைகள் இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட எதனாலும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதனாலும் மாற்றியமைக்கப்படுவது, நீக்கப்படுவது அல்லது கலைத்து கைக்கொள்ளப்படுவது வரையிலும் அதற்கிணங்கிய வகையில் நடைமுறையில் தொடர்ந்து இருக்க வேண்டும்.

(4) மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி நகராட்சி மன்றத்தால் அல்லது நகராட்சி மன்றத்திற்கு எதிராக அல்லது அதிகார அமைப்பால் அல்லது அதிகார அமைப்பிற்கு எதிராக அல்லது நபரெவராலும் அல்லது நபரெவருக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தும், மேற்சொன்ன நடவடிக்கைகள் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி தொடங்கியிருந்தாற் போன்று மாநகராட்சியால், அதிகார அமைப்பால் அல்லது நபரால் அல்லது அதற்கு அல்லது அவருக்கு எதிராகத் தொடரலாம்.

(5) அத்தகைய தொடக்கத் தேதிக்கு முன்பு அதிகார அமைப்பு எதனாலும் மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டம் நடைமுறையில் இருந்திருந்தாற்போன்று இந்தச் சட்டத்தின்படி அத்தகைய நடவடிக்கையை எடுப்பதற்குரிய அதிகார அமைப்பால் எடுக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(6) இந்தச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்தபோதிலும் இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு உடனடி முன்பாக நகராட்சியில் பணியில் இருந்த அலுவலர் அல்லது பணியாளர் ஒவ்வொருவரும் அத்தகைய தொடக்கத்தேதியன்றும் அது முதற்கொண்டும் மாநகராட்சியின் அலுவலரொருவராக அல்லது பணியாளரொருவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

***வரம்புரை:*** ஆனால் *(a)* மாநகராட்சியின் பணியில் அவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் விளைவாக அத்தகைய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பொருந்தத்தக்க வரையுரைகளும், வரைக்கட்டுகளும் அத்தகைய தொடக்கத் தேதிக்கு உடனடி முன்பாக அத்தகைய பணியாளர்களுக்கு அடிப்படைச் சம்பளம் மற்றும் படிகள், விடுப்பு, ஓய்வூதியம், பணிக்கொடை, வருங்கால வைப்பு நிதி, ஓய்வுபெறும் வயது வரம்பு ஆகியவற்றைப் பொறுத்தவரையில் பொருந்தக்கூடிய அத்தகைய வரையுரைகளுக்கும், வரைக்கட்டுகளுக்கும் குறைவுபடாது இருத்தல் வேண்டும்; மற்றும்

*(b)* அத்தகைய தொடக்கத் தேதி வரையிலும் நகராட்சியின் கீழ் அத்தகைய அலுவலர் அல்லது பிற பணியாளர் எவராலும் செய்யப்பட்ட பணியானது, மாநகராட்சியின் கீழ் செய்யப்பட்ட பணியாகக் கொள்ளப்படுதல் வேண்டும், மற்றும் அவர் ஊதிய உயர்வுகள், விடுப்பு, ஓய்வூதியம், வருங்கால வைப்பு நிதி, பணிக்கொடை ஆகியவற்றின் நோக்கத்திற்காக அந்தப் பணியைக் கணக்கிலெடுத்துக்கொள்ளும் உரிமைத்தகுதி பெற்றிருத்தல் வேண்டும்:

***இரண்டாம் வரம்புரை:*** ஆனால், நகராட்சியில் பணிபுரிந்து கொண்டிருக்கும் அலுவலர் அல்லது பிற பணியாளர் எவரும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள்ளும் அத்தகைய முறையிலும் மாநகராட்சிப் பணியில் எடுத்துக்கொள்ளும்படியாகவோ அல்லது மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 73–A எனும் பிரிவில் சுட்டப்பட்ட பணிக்கு மாறுதல் செய்யும் படியாகவோ அல்லது வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய ஆட்குறைப்புப் பலன்களின்பேரில் நகராட்சியின் பணியிலிருந்து நீக்கும் படியாகவோ தமது விருப்பத்தைத் தெரிவிக்க விருப்பத் தெரிவு ஒன்று அளிக்கப்படுதல் வேண்டும்.

(7) மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி திண்டுக்கல் நகராட்சியில் சிற்றொகுதிகளாகப் பிரிக்கப்பட்ட மற்றும் இந்தச் சட்டத்தின் தொடக்கத்தேதியன்று நடைமுறையில் உள்ள சிற்றொகுதி எதுவும் அது மாற்றியமைக்கப்படாதவரையிலும் மாநகராட்சியின் கோட்டமாகவே கொள்ளப்படுதல் வேண்டும்.

(8) மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி திண்டுக்கல் நகராட்சிக்காகத் தயாரிக்கப்பட்டு இந்தச் சட்டம் தொடங்கிய தேதியன்று நடைமுறையில் இருக்கும் வாக்காளர் பட்டியலானது, புதிய வாக்களார் பட்டியல் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படும் வரையிலும், மாநகராட்சிக்குரிய வாக்காளர் பட்டியலாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் நகராட்சியின் ஒவ்வொரு சிற்றொகுதி தொடர்பான மேற்சொன்ன வாக்காளர் பட்டியலின் பகுதியானது, மாநகராட்சியின் நேரிணையான கோட்டத்திற்கான வாக்காளர் பட்டியலின் பட்டியலாகக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(9) இந்தச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்த போதிலும் இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு உடனடி முன்பாக அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டு பதவி வகிக்கிற திண்டுக்கல் நகராட்சியின் தலைமையாளர், துணைத் தலைமையாளர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் இந்தச் சட்டத்தின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட திண்டுக்கல் மாநகராட்சியின் மேயராக, துணை மேயராக மற்றும் மன்ற உறுப்பினர்களாகக் கொள்ளப்படுதல்வேண்டும்; மற்றும் அத்தகைய மேயர், துணை மேயர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் இது குறித்து அரசினால் அறிவிக்கையின் வாயிலாக நிர்ணயிக்கக்கூடிய அத்தகைய தேதிவரையிலும் பதவியைத் தொடர்ந்து வகித்தல் வேண்டும். அல்லது அத்தகைய தேதி எதுவும் நிர்ணயிக்கப்படாமலிருக்கும் நேர்வில், மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி அவர்களுடைய பதவிக்காலம் முடிவடையும் தேதி வரையிலும் பதவி வகித்தல் வேண்டும். மற்றும் அத்தகைய மேயர், துணை மேயர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் இந்தச் சட்டத்தினால் அல்லது இந்தச் சட்டத்தின்படி மேயருக்கு, துணைமேயருக்கு மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் செலுத்துதல் வேண்டும், மற்றும் அனைத்துக் கடமைகளையும் ஆற்றுதல் வேண்டும்.

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

**10.** (1) அரசானது, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) *(a)* இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படுதல் வேண்டும். மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளிலேயே நடைமுறைக்கு வர வேண்டும்.

*(b)* இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும், அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்று சொல்லப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளிலேயே நடைமுறைக்கு வர வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும் அது அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும், மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் அல்லது அதனையடுத்தக் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்னர் அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதனையும் சட்டமன்றப் பேரவையானது செய்யுமாயின் அல்லது அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதுவும் செய்யப்படுதலோ அல்லது பிறப்பிக்கப்படுதலோ கூடாது என சட்டமன்றப்பேரவை முடிவு செய்யுமாயின், அந்த விதியானது அல்லது அறிவிக்கையானது அல்லது ஆணையானது அதன்பின்னர் அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்திலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும், அல்லது நேர்விற்கேற்ப, நடைமுறைக்கு வராது போதல் வேண்டும்; எனினும் அவ்வாறான மாறுதல் அல்லது அழித்தறவு எதுவும், அந்த விதியின்படி அல்லது அறிவிக்கையின்படி அல்லது ஆணையின்படி முன்னரே செய்யப்பட்ட செயல் ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

**11.** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால் அரசு, *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் ஆணையின் வாயிலாக அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையானதாகவோ அல்லது உகந்ததாகவோ அதற்குத் தோன்றுகிற, இந்தச் சட்டத்திற்கு முரணாக இல்லாத அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்.

***வரம்புரை:*** ஆனால், இந்தச் சட்டம் தொடங்கிய தேதியிலிருந்து இரண்டாண்டுக்கால அளவு முடிவடைந்த பின்னர் அத்தகைய ஆணை எதுவும் செய்யப்படுதலாகாது.

**நோக்க—காரண விளக்கவுரை.**

மக்கள் தொகை அதிகரித்தல், ஆண்டு வருமானத்தில் முன்னேற்றம் மற்றும் திண்டுக்கல்லின் மக்கள்தொகைப் பெருக்கத்திற்கேற்ப அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதை முன்னிட்டு வகை செய்யப்படவேண்டிய குடிமைப்பணிகளின் அளவீட்டினையும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினையும் மேம்படுத்துவதனைக் கருத்தில் கொண்டு திண்டுக்கல் நகராட்சி மாநகராட்சியாக நிலை உயர்த்தப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2013–2014–ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டக் கூட்டத்தொடரில் அறிவித்திருக்கிறார்கள்.

**2.** மேற்சொன்ன அறிவிப்புக்குச் செயல் வடிவம் கொடுப்பதற்காக, அரசானது, தேவைப்படும் அத்தகைய மாற்றமைவுகளுடன், 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) வகைமுறைகளைத் தழுவி ஒரு சிறப்புச் சட்டத்தினை இயற்றுவதென முடிவு செய்துள்ளது.

**3.** இச்சட்டமுன்வடிவு, மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**கே.பி. முனுசாமி**
*நகராட்சி நிர்வாகம் , ஊரக வளர்ச்சி,*
*சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்*
*சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.*

2013–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 28–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க–காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2013**

**1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தினை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக்குடியரசின் அறுபத்து நான்காம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

தமிழ்நாடு சட்டம் 22/1959

குறுந்தலைப்பும், தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2013–ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டம் என அழைக்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் மூலம் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

25–A எனும் புதிய பிரிவைப் புகுத்துதல்.

**2.** (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தின் 25–ஆம் பிரிவிற்குப் பின்பு பின்வரும் பிரிவு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது ;

“25-A அறங்காவலர்களின் தகுதிகள்

ஒருவர் சமய நிறுவனம் அல்லது நிலைக்கொடை எதற்கும் அறங்காவலராக பணியமர்த்தம் செய்வதற்கும் மற்றும் அறங்காவலராக இருப்பதற்கும் அதற்கான தகுதியை உடையவராக இருத்தல் வேண்டும்.

*(a)* அவர் கடவுள் நம்பிக்கையையுடையவராக இருக்கிறாரென்றால்;

*(b)* சமய நிறுவனம் அல்லது நிலைக் கொடை அமைந்துள்ள இடத்தின் வட்டாரத்தில் அவர் நன்னடத்தையும், நற்பெயரையும் கொண்டவராகவும் மற்றும் மதிப்பும் மரியாதைக்குரியவராகவும் இருக்கிறாரென்றால்;

*(c)* சமய நிறுவனம் அல்லது நிலைக்கொடைகள் அலுவற்பணிகளைச் செய்வதற்கு போதுமான நேரத்தையும் மற்றும் உரித்தத்தையும் பெற்றிருக்கிறாரென்றால்; மற்றும்

*(d)* அதற்கு இடைவிளைவான அத்தகைய பிற சிறப்புத் தகுதிகளைக் கொண்டிருக்கிறார் என்றால் தகுதியுடையவராக இருப்பார்.”

26–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்தின் 26–ஆம் பிரிவில்,–

(1) ஓரத்தலைப்பிற்காக பின்வரும் ஓரத்தலைப்பு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது “அறங்காவலர்களின் தகுதியின்மைகள்”.

(2) (1)–ஆம் உட்பிரிவிற்காக பின்வரும் உட்பிரிவுகள் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது “(1) ஒருவர்;

*(a)* அவர் இந்து சமயத்தை வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளாதிருப்பாராயின்;

*(b)* அவர் ஒரு இந்திய நாட்டின் குடிமகனாக இல்லாதிருப்பாராயின்;

*(c)* பரம்பரை அறங்காவலரை பொறுத்தவரை தவிர, அவர் இருபத்தைந்து வயதுக்குக் குறைந்தவராக இருப்பாராயின்;

*(d)* அவர் விடுவிப்புப்பெறாத நொடிப்பு நிலையராயிருப்பின்;

*(e)* அறங்காவலருடைய பதவிப் பணிகளை புரிவதற்கும் கடமைகளை ஆற்றுவதற்கும் அவரை தகுதியற்றவராக ஆக்கக்கூடிய அளவிற்கு மனசீர்கேடுற்றவராக இருப்பாராயின் அல்லது வேறு மனநிலை குறைவினால் அல்லது மனத்தளர்ச்சியினால் துன்புறுவாராயின் அல்லது தொழுநோயினால் அல்லது பிற அருவருக்கத்தக்க நோய் எதனாலும் துன்புறுவாராயின்;

(*f*) மைய அரசின் அல்லது மாநில அரசு எதனின் அல்லது வட்டார அதிகார அமைப்பு எதனின் கீழுள்ள பணியிலிருந்து நீக்கப்படுவாராயின் அல்லது பணியறவு செய்யப்படுவாராயின்;

(*g*) ஒருவர் ஒழுக்கத் தவற்றினை உள்ளடக்கிய குற்றத்திற்காக குற்றவியல் நீதிமன்றத்தால் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்து, அத்தகைய தண்டனைத் தீர்ப்பு எதிர்மாறாக்கப்படாதிருப்பின் அல்லது அந்தக் குற்றம் மன்னிக்கப்படாமல் இருக்குமாயின்;

(*h*) அவர் சமய நிறுவனம் அல்லது நிலைக்கொடை எதனின் நலனுக்கும் எதிராக செயல்படுவாராயின்;

(*i*) சமய நிறுவனம் அல்லது நிலைக்கொடை எதற்கும் எந்த வகையிலும் பாக்கி வைத்திருப்பாராயின் சமய நிறுவனம் அல்லது நிலைக்கொடை எதனின் அறங்காவலராக அமர்த்தப்படுவதற்கும், அறங்காவலராக இருப்பதற்கும் தகுதியற்றவர் ஆவார்.''

(1-A) ஒருவர்

(*a*) சமய நிறுவனம் அல்லது நிலைக்கொடைக்கு உரிமையுடைய சொத்தின் பெயரில் நடைமுறையில் உள்ள குத்தகையில் அல்லது அதனுடன் செய்யப்பட்ட ஒப்பந்தத்தில், அதற்காக செய்யப்படும் பணி எதிலும் உரித்தமுடையவராக இருப்பாராயின்;

(*b*) அவர் சமய நிறுவனத்தின் சார்பாக அல்லது அதற்கு எதிராக ஊதியம் பெறும் சட்டத்தொழிலாற்றுநராக பணியமர்த்தப்பட்டிருப்பாராயின். சமய நிறுவனம் அல்லது நிலைக்கொடை எதனின் அறங்காவலராக அமர்த்தப்படுவதற்கும், அறங்காவலராக இருப்பதற்கும் தகுதியற்றவர் ஆவார்.

(3) (2)–ஆம் உட்பிரிவில் (a) எனும் கூறில், ''(1)–ஆம் உட்பிரிவு'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''(1)–ஆம் உட்பிரிவு அல்லது (1–A)–ஆம் உட்பிரிவு'' என்ற சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(4) (3)–ஆம் உட்பிரிவில், ''(1)–ஆம் உட்பிரிவு'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''(1)–ஆம் உட்பிரிவு அல்லது (1–A)–ஆம் உட்பிரிவு'' என்ற சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(5) (4)–ஆம் உட்பிரிவில், ''(1)–ஆம் உட்பிரிவு'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''(1)–ஆம் உட்பிரிவு அல்லது (1–A)–ஆம் உட்பிரிவு'' என்ற சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

53–ஆம் பிரிவிற்கான திருத்தம்

**4.** முதன்மைச் சட்டத்தில், 53–ஆம் பிரிவில், (2)–ஆம் உட்பிரிவில்,

(1) *(e)* எனும் கூறில், ''நிறுவனம்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''சமய நிறுவனம் அல்லது நிலைக்கொடை'' என்ற சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) *(i)* மற்றும் (j) ஆகிய கூறுகளுக்குப் பதிலாக, பின்வரும் கூறுகள் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

''*(i)* எந்தவொரு சமய நிறுவனம் அல்லது நிலைக்கொடைக்கு உரிமையுடைய சொத்தின் பெயரில் நடைமுறையில் உள்ள குத்தகையில் அல்லது அதனுடன் செய்யப்பட்ட ஒப்பந்தத்தில், அதற்காக செய்யப்படும் பணி எதிலும் உரித்தமுடையவராக இருப்பாராயின்;

*(ii)* எந்தவொரு சமய நிறுவனம் அல்லது நிலைக்கொடைக்கு அவரால் கொடுபட வேண்டியதாக எவ்வகையான நிலுவைத்தொகை அல்லது தவறுதல் இருக்குமாயின்;

*(j)* சமய நிறுவனம் அல்லது நிலைக்கொடைகள் எதனின் நலனுக்கும் எதிராக செயல்படுவாராயின்.''

**நோக்க–காரண விளக்கவுரை.**

1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22/1959)இன் 26–ஆம் பிரிவின், (1)–ஆம் உட்பிரிவு சமய நிறுவனம் எதற்கும் அறங்காவலராக பணியமர்த்தம் செய்வதற்குரிய மற்றும் இருப்பதற்குரிய தகுதியின்மைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறது. மேற்சொன்ன, 26–ஆம் பிரிவின், (1)–ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதியின்மைகள் அந்த குறிப்பிட்ட சமய நிறுவனத்திற்கு தொடர்புடைய தகுதியின்மைகளாக இருந்தால் மட்டும் அந்த சமய நிறுவனம் ஒன்றிற்கு அறங்காவலராக பணியமர்த்தம் செய்வதற்கும், இருப்பதற்கும் அது ஒரு தடையாக இருக்கும். தற்பொழுது, அரசு நபர் ஒருவரை சமய நிறுவனத்திற்கு மற்றும் நிலைக்கொடை எதற்கும் அறங்காவலராக பணியமர்த்தம் செய்வதற்கு, தொடர்ந்து இருப்பதற்கு, தடையாகவுள்ள குறித்த சில தகுதியின்மைகளைக் குறிப்பிடுவதென முடிவு செய்துள்ளது மற்றும் குறித்த சில தகுதியின்மைகள் நபர் ஒருவரை சமய நிறுவனத்தின் மற்றும் நிலைக்கொடை எதற்கும் அறங்காவலராக பணியமர்த்தம் செய்தல் மற்றும் இருத்தல் தொடர்பானதாக அந்தத் தகுதியின்மை இருந்தால் தடைசெய்யக்கூடியதாய் இருக்கும். அதற்கிணங்கிய வகையில் அது தமிழ்நாடு சட்டம் 22/1959 சட்டத்தின் 26–ஆம் பிரிவின், (1)–ஆம் உட்பிரிவை திருத்துவதென முடிவு செய்துள்ளது.

**2.** 22/1959 தமிழ்நாடு சட்டத்தின் 53–ஆம் பிரிவின் (2)–ஆம் உட்பிரிவில் தகுதியின்மைகள் இருப்பதன்பேரில் சமய நிறுவனம் ஒன்றின் அறங்காவலர்களை இடைநீக்கம், விலக்கம் மற்றும் முழுவதுமாக நீக்கிவிடுவதற்காக வகைசெய்கிறது. இறுதியாக தமிழ்நாடு சட்டம் 22/1959 இன் 26–ஆம் பிரிவிற்கு கருதப்பட்ட திருத்தத்தின்பேரில், அது மேலும் 22/1959 தமிழ்நாடு சட்டத்தின் 53–ஆம் பிரிவில், (2)–ஆம் உட்பிரிவின் *(e)*, (i) மற்றும் (j) கூறுகளைத் திருத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

**3.** அதன் பின்பு 22/1959 தமிழ்நாடு சட்டத்தின் 26–ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதியின்மை அறங்காவலராக பணியமர்த்தம் செய்வதற்காக மற்றும் அறங்காவலராக இருப்பதற்கு தகுதியின்மைகளாக இருக்கின்றன. அது சமய நிறுவனம் எதற்கும் அறங்காவலராக இருப்பதற்கும் மற்றும் பணியமர்த்தம் செய்வதற்கும் குறித்த சில தகுதிகளை குறிப்பிடுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்கிய வகையில், அது சமய நிறுவனம் எதற்கும் அறங்காவலராக பணியமர்த்தம் செய்வதற்காக அல்லது அறங்காவலராக இருப்பதற்கான தகுதிகளைக் குறிப்பிடும் புதிய பிரிவு ஒன்றினைப் புகுத்துவதென முடிவு செய்திருக்கிறது.

**4.** இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல் வடிவம் அளிப்பதற்கு விழைகிறது.

**பூ. செந்தூர் பாண்டியன்,**
*இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.*

**அ.மு.பி. ஜமாலுதீன்,**
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.